[24th January 1964

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் கலப்புத் திருமணம் செய்து வைப்பதற்குப் பிரசங்கம் செய்ய வருகிறவர்கள் பணம் கேட்காமல் வந்தால் நன்றாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அமைச்சருக்குச் சொந்த அனுபவம் ஏதாவது இதிலே உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சொந்த அனுபவம் ஒன்றும் இல்லை. சில தலைவர்கள் திருமணத்திற்கு வந்து பேசவேண்டுமென்று அழைக்கப்பட்டால் 50 ரூபாய், 100 ரூபாய் கேட்கிறார்கள் என்று பல புகார்கள், பல வரலாறுகள் இருக்கின்றன.

திரு. து. ப. அழகமுத்து : பணம் கொடுத்து அனுபவம் முதல் அமைச்சருக்கு ஏதாவது உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திருமண வைபவத்தில் பேச்சுக்கு இடம் இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். நான் எங்கள் வீட்டில் கல்யாணத்தின்போது பிரசங்கம் வைக்க அனுமதிப்பதில்லை.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு

* 86 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் நமது ராஜ்யத்தில் எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு ஆஜரான மாணவர்கள் எத்தனைபேர், மாவட்டவாரியாக ?

(இ) இத்தேர்வில் வெற்றி பெற்ற (1) ஆண்கள் (2) பெண்கள் எத்தனைபேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The particulars in respect of the S.S.L.C. Public Examination held in March 1963 are furnished in the statement [a] placed on the table of the House.

திரு. ஆ. கு. சுப்பையா : ஆஜரான மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, தேர்வு பெற்ற மாணவர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குப் பல காரணங்கள் உண்டு. மாணவர்களுடைய தரம், பள்ளிக்கூடத்தின் தரம், சொல்லிக் கொடுக்கிறவர்களின் தரம் எல்லாம் சேர்ந்துதான் இது ஏற்படுகிறது. ஆனால், சென்ற பரீட்சையிலே தேர்வு முடிவுகளில் சற்று அபிவிருத்தி ஏற்பட்டது என்றுதான் இப்பொழுது குறிப்பிடலாம்.

---

[a] Printed as Appendix I on page 150.

24th January 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம்: தேர்வுகள் வர வர அபிவிருத்தி இல்லாமல் இருக்கிறது. பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர் களுக்குத் தேர்வுகளில் இருக்கும் கடினம்தான் காரணமா? மாண வர்கள் தரத்தை மீறிய முறையில் தேர்வுகள் இருக்கின்றன என்று எடுத்துக்கொள்வதா? அல்லது தேர்வுக்கு அவசியமான பக்கு வம் மாணவர்களிடத்தில் ஏற்படவில்லை என்று எடுத்துக் கொள்வதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது பெரிய பிரச்னை. சிக்க லான பிரச்னை என்று கூடச் சொல்லலாம். சுலபமாக இதற்கு வழி காண முடியாது. நிபுணர்கள் எல்லோரும் சேர்ந்து, அகில இந்திய ரீதியிலே கூட சில மாதங்களுக்கு முன்பு இதைப்பற்றி விவாதித்தார்கள். இந்த விரயத்தைத் தவிர்க்கவேண்டும், அதற்கு என்ன செய்வது, எவ்வளவு தூரம் விரயத்தைத் தவிர்க்க முடியும் என்பதுபற்றியெல்லாம் நிபுணர்களின் ஆலோசனை கோரப்பட்டது. அவர்கள் தெரிவித்த யோசனைகள் அரசாங்கத் தின் பரிசீலனையில் இருக்கின்றன.

SRI CHIRANJEEVULU NAIDU: Sir, the number of candidates declared eligible in the high schools maintained by the District Boards and Government are low when compared with the other aided schools. What are the steps that are to be taken to improve the standard?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I do not think that the standard in the schools maintained by the Government and District Boards is lower than the aided schools.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, மாணவர்கள் இப்பொழுது படிக்கின்ற நேரத்தைக் காட்டிலும் மற்ற நிகழ்ச்சி களிலே பங்கு கொள்ளுகின்ற நேரம் அதிகமாக இருப்பதால், தேர் விலே இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன என்பதை அரசாங்கம் சிந்திக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதை நான் ஒப்புக்கொள் வதற்கில்லை. ஆனல், ஒரு யோசனை—விடுமுறைகளைக் குறைக்க வேண்டுமென்பது. இப்பொழுது விடுமுறை அதிகமாக இருக் கிறது என்பதற்காக அது ஓரளவு குறைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் போதாதது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது அதற்கு ஆசிரியர்கள் இன்னும் ஒத்துக்கொள்ளவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தேர்வு களிலே வெற்றிபெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு என்று கொடுக்கிருர்கள். அந்தப் பரிசுகள் அரசாங்கத் தால் கொடுக்கப்படுகிறதா அல்லது அதிகாரிகளின் அபிப்பிராயப் படி கொடுக்கப்படுகிறதா? அவற்றை ப்ரைஸ் பாண்டாகக் கொடுக்கிருர்களே, அது எந்த அடிப்படையில் கொடுக்கிருர்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ப்ரைஸ் கொடுப்பது என்ருல், ப்ரைஸ் பாண்டாகக் கொடுப்பதில் தவறு ஒன்றும் இல்லை.

[24th January 1964

திரு. அ. ராகவ ரெட்டி : சார், மற்ற மாவட்டங்களை விட செங்கல்பட்டு, தென்னுற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் குறைவாகத் தேர்ச்சி பெற்று இருப்பதாகத் தெரிகிறதே, அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பர்சென்டேஜைப் பார்த்தால் குறைவு இல்லை; ஆனுல் மாணவர் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம்.

Disbursement of salaries to teachers in North Arcot district

*87 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the difficulties of the teachers and other staff of the high schools in the North Arcot district due to the late payment of salaries every month; and

(*b*) if so the action taken by the Government for the payment of their salaries by the first week of every month.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) In the month of February 1963, salaries of the staff of the 20 Board High Schools out of 120 schools in the North Arcot district were not paid till 20th February 1963. There were no other late payments of salaries.

(*b*) Specific instructions have been issued to all headmasters of schools to prepare and submit the pay bills for each month so as to reach the office of the Special District Educational Officer, North Arcot, on or before 23rd of each month. Prompt payment of salary before the first week of every month has been ensured since February 1963.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, பணத் தட்டுப்பாடு இல்லை என்றுலும், ஆசிரியர்களுடைய சம்பளம் சில நேரங்களிலே தாமதப்படுத்தப்படுகின்றன. எந்த எந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறு நிறுத்தி வைக்கப்படுகிறது என்று தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த எந்த சந்தர்ப்பத்தில் சம்பளம் நிறுத்தி வைக்கப்பட்டது என்பதற்கு தகவல் இல்லை.

திரு. ம. கமலநாதன் : சர்விஸ் ரெஜிஸ்டர் திறக்கவில்லை என்பதற்காக சம்பளம் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தால், அப்படி சர்விஸ் ரெஜிஸ்டர் கொடுப்பது நிர்வாகத்தின் பொருப்பு அல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விடை அளிக்கிறேன்.